## மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்

O.S. No. 50 of 2020

பெயர் : விஜயகுமார்

P.W.3

03.03.2026

**வா.சா.3 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

A.N.நடராஜன் செட்டியார் குடும்ப சொத்துக்கள் சம்பந்தமான ஆவணங்கள் எதிலும் நான் சாட்சியாக கையொப்பமிட்டதில்லை என்பது சரி. நடராஜன் செட்டியாரின் மகன் சண்முகம் ஒரு வழக்கறிஞர் என்பது சரி. பொதுவாக ஒருவரின் மகன் வழக்கறிஞராக இருந்தால் அந்த நபர் அவர் சொத்துக்களை பொறுத்து ஆவணம் எதுவும் ஏற்படுத்துவதாக இருந்தால் வழக்கறிஞராக உள்ள அவரது மகனை கலந்தாலோசித்து–விட்டுதான் ஆவணம் ஏற்படுத்துவார் என்றால், எனக்கு அது பற்றி தெரியாது. நடராஜன் செட்டியாரின் மகன் சண்முகமும், நானும் PUC ஒன்றாக ஊட்டி கலைக்கல்லூரியில் படித்தோம். நடராஜன் செட்டியார் என்னை உயிலில் சாட்சியாக இருக்க அழைத்ததாக கூறுவதை பொறுத்து அவர் அவ்வாறு என்னை அழைத்தபிறகு நான் அந்த விவரத்தை சண்முகத்திடம் தெரிவித்து சண்முகத்தை

வரச்சொன்னேனா என்றால், சண்முகம்தான் என்னை வரச்சொன்னார், சாட்சி மீண்டும் சண்முகம் அப்பா நடராஜன்தான் என்னை வரச்சொன்னார் என்று கூறுகிறார். நடராஜன் செட்டியாருக்கும், எனக்கும் பேச்சு வார்த்தையே இல்லாத நிலையில் என்னை அவர் அவரது உயில் ஆவணத்தில் சாட்சியாக இருக்கும்படி அழைத்ததாக கூறுவது பொய் என்றால், தவறு. வா.சா.ஆ–2 உயில் ஆவணத்தில் உள்ள கையொப்பம் நடராஜன் செட்டியாருடையது அல்ல என்றால், தவறு. வா.சா.ஆ–2 உயில் ஆவணத்தில் நடராஜன் செட்டியார் என் முன்பாக கையொப்பமிட்டதாக நான் கூறுவது பொய் என்றால், தவறு. 1ஆம் வாதியும், வா.சா.2 பாக்கியலட்சுமியும், நானும் கூட்டாக சேர்ந்து வா.சா.ஆ–2 உயில் சாசனத்தை மோசடியாக உருவாக்கியுள்ளோம் என்றால், தவறு. நடராஜன் செட்டியாரின் மனைவி இறந்த பிறகும், நடராஜன் செட்டியார் இறந்தபிறகும், வா.சா.2 பாக்கியலட்சுமியின் கணவர் இறந்தபிறகும் அவ்வாறு நாங்கள் அனைவரும் சேர்ந்து மேற்படி வா.சா.ஆ–2 உயில் சாசனத்தை உருவாக்கியுள்ளோம் என்றால், தவறு. வா.சா.ஆ–2 உயில் சாசனத்தை தயாரித்ததாக கூறும் சமயத்தில் நடராஜன் செட்டியாரின் மனைவியும், வா.சா.2 கணவரும் உடன் இருந்ததாக நான் கூறியுள்ளதும் பொய் என்றால், தவறு. நான் கூறுவதுபோல் நடராஜன் செட்டியார் எந்த உயில் சாசனமும் ஏற்படுத்தவில்லை என்றும், அவர் எந்தவித உயில் ஆவணமும்

ஏற்படுத்தாமல்தான் இறந்தார் என்றும் சொன்னால், தவறு. சண்முகம் என் நண்பர் என்பதால், அவர் மனைவியான 1ஆம் வாதி கேட்டு கொண்டதிற்கிணங்க நான் மோசடியாக உருவாக்கப்பட்ட உயிலுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், தவறு.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை

A. Muraleedharan

Digitally signed by A. Muraleedharan
Date: 2026.03.03 15:43:27 +0530